Registered as a Newspaper in Ceylon

விலை சதம 1௦

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 20 ஆம் நாள் துல்கஃதா 18 (2 4-64) வியாழக்கிழமை இதழ் 52

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 1[illegible]-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

'இ துசாரி முன்னணி,

# அரசாங்கத்துடன் சேர அனுமதிக்கமாட்டேன்'

## உள்ளூர் உற்பத்தி ஸ்தம்பிக்கலாம்

### தயாரிப்பாளர்கள் கவலை

கொழும்பு, புதன்

மூலப்பொருள்களையும் உதிரிப்பாகங்களையும் இறக்குமதி செய்வதற்கு தங்களுக்கு லைசென்ஸுகள் வழங்கப்படாவிட்டால் உள்ளூர் உற்பத்தி ஸ்தம்பிப்பதுடன் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடலாமென்றும் முக்கிய உற்பத்தியாளர்கள் அரசாங்கத்திடம் அறிவித்துள்ளனர். இதன் காரணமாக உள்ளூர் தயாரிப்பாளர்கள் கவலைகொண்டுள்ளனர்.

மூலப் பொருளகளை இறக்குமதி செய்யும் லைசென்ஸுகளுக்கான விண்ணப்பங்களை அவர் மூன்று மாத. காலத்துக்கு முன்னர் தங்கள் அனுப்பியும் இன்னும் தங்களுக்கு இறக்குமதி சம்பந்தமான அதிகாரம் வழங்கப்படவில்லையென்றும் உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்யவும் தாங்கள் அனுமதி கோரியிருந்ததாகவும் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு ரொபேர்ட் எச்சரிக்கை

கொழும்பு, புதன்

**ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்துகொள்ளும் எந்தவித முயற்சியையும் எதிர்க்க திரு. ரொபேர்ட் குணவர்த்தன தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.**

**"சில சந்தர்ப்பவாதிகள் பதவி மோகங்கொண்டு இடதுசாரி ஐக்கிய முன்னணியைப் பிளவுபடுத்த எண்ணுகிறார்கள். இதை நான் அனுமதிக்கமாட்டேன். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்துடன் சேர எண்ணும் எந்த இடதுசாரித் தலைவருக்கும் நான் சவால் விடத் தயாராகவிருக்கிறேன்" என அவர் எச்சரிக்கை செய்துள்ளார்.**

திரு. ரொபேர்ட் இதுசம்பந்தமாக தமது அபிப்பிராயத்தை வெளியிடுகையில் மேலும் எடுத்துக் கூறியுள்ளதாவது:

'பார்லிமெண்டரி முறையோ அல்லது சர்வாதிகார முறையோ இடதுசாரி ஐக்கிய முன்னணியைத் தகர்க்க அனுமதிக்கப்படக்கூடாது. இந்த நாட்டிலுள்ள தொழிலாள வர்க்கத்திருக்கும் விவசாயிகளுக்கும் ஒரே ஆயுதமாக இருப்பது இந்த முன்னணியே.'

## "அப்துல்லா மீதான வழக்கு வாபஸ் பெறப்படும்"

### காஷ்மீர் அரசாங்க முடிவுக்கு சாஸ்திரி ஊர்ஜிதம்

புதுடில்லி, ஏப்ரல் 1

**ஷேக் அப்துல்லாவுக்கும், மற்றவர்களுக்கும் எதிரான வழக்கை வாபஸ்செய்துகொள்ளும் காஷ்மீர் அரசாங்கத்தின் முடிவை திரு. லால்பகதூர் சாஸ்திரி இன்று லோகசபையில் அறிவித்தார்.**

இவர்களை நிபந்தனையின்றி விடுதலைசெய்வதென்ற ராஜ்ய அரசாங்கத்தின் முடிவை திரு. சாஸ்திரி ஊர்ஜிதம் செய்தார்.

இந்த வழக்கை விலக்கிக்கொள்ளும் மனுவை ராஜ்ய அட்வக்கேட் ஜெனரல் அநேகமாக இன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கக்கூடும் என எதிர்பார்ப்பதாயும் சாஸ்திரி தெரிவித்தார்.

ஸ்ரீ ஜாஸ்வந்த் மேத்தா கொண்டுவந்த கவனஈர்ப்புப் பிரேரணைமீது அவர் பேசினார்.

ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்வது பற்றிய விஷயம் நீண்டகாலமாகவே ராஜ்ய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்தது. இது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்துடன் ஆலோசனை கலக்கப்பட்டது. "சாதிக் மந்திரிசபை,காஷ்மீரில் புதிய சூழ்நிலையை உருவாக்க விரும்புகிறது. ஷேக் அப்துல்லாவின் விடுதலை காஷ்மீரின் அமைதிக்கு உதவிசெய்யும் என ராஜ்ய அரசாங்கம் நம்புகிறது. இதற்குத் தடையாக இருக்க நாம் விரும்பவில்லை. அப்துல்லாவைக்கைது செய்வதும் விடுதலை செய்வதும் ராஜ்ய அரசாங்கத்தின் பொறுப்பில் விடப்பட்டிருந்தது" என்றும் சாஸ்திரி தெரிவித்தார்.

## இராணுவ புரட்சி!

ரியோடிஜெனரோ, ஏப் 1

பிரேஸில் நாட்டில் இராணுவப்புரட்சி ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரேஸிலின் அதிபர் ஆட்சியை கவிழ்க்க இரு கவர்னர்கள் முயற்சி மேற்கொண்டுள்ளார்கள், என்றும் இவர்களுக்கு ஏனைய மாகணங்களிலுமிருக்கும் ஆறு கவர்னர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரேஸில் தலை நகரமான ரியோடி ஜெனரோவில் தற்பொழுது அமைதி நிலவுகிறதென்றும், கிளர்ச்சித் தலைவர்கள் இந்த நகரைநோக்கி முன்னேறி வருவதாயும் அறிவிக்கப்பட்டுள்ளது. பிரேஸில் அதிபரின் சில அரசியல் சீர்திருத்தங்களே புரட்சிக்கு வழி காட்டியது என்று கருதப்படுகிறது.

## "கொழும்பு யோசனைகளை சீனு ஏற்கும்"

### ஈராக் அதிபர் நம்பிக்கை

புதுடில்லி, ஏப் 1

பாரத-பாகிஸ்தான் கருத்து வேறுபாடுகளை பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்து இரு நாடுகளும் நேசமனப்பான்மையுடன் வாழவேண்டுமென்று ஈராக் அதிபர் அரீப தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமருடன் நிகழ்த்திய பேச்சுக்களைத் தொடர்ந்து இருதலைவர்களும் வெளியிட்ட கூட்டறிக்கையில்தான் அதிபர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

சீன-இந்திய எல்லைத் தகராறு பற்றி அதிபர் அரீப் குறிப்பிடுகையில், கொழும்பு யோசனைகளை சீனு ஏற்றுக் கொள்ளுமென்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஈராக்குக்கு வருமாறு அதிபர் அரீப் விடுத்த அழைப்பை பிரதமர் நேருவும் ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணனும் ஏற்றுக் கொண்டனர்.

அதிபர் அரீப் இன்று விஷேச விமானம் மூலம் பாக்த் போய்ச்சேர்ந்தனர்.

## சிட்னி டி' சொய்ஸா ஆஜராவார்

கொழும்பு, புதன்

பண்டாரநாயக்கா கொலை விசாரணைக் கமிஷன் நாளைக் காலை மீண்டும் கூடும் பொழுது சதி வழக்கில் ஒரு எதிரியான சிட்னி டி' சொய்ஸா ஆஜராவார்.

திரு. தஹநாயக்கா, திரு. ஒஸ்வி கொதியா, திரு. லயன்ஸ் குணதிலகா ஆகியோர் சம்பந்தப்பட்ட சாட்சியங்கள் ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டுவிட்டன. திருமதி விமலா விஜயவர்த்தன பற்றிய சாட்சியம் பதிவாகப்படவில்லை.

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சுருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு

BAYER

பொலிடோலுடன்--மெற்றசிஸ்ரொக்ஸ்

FOLIDOL METASYSTOX

கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்

PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T'GRAMS ROYAEL

## மணிவாக்கு

ஒருவர் தன் கையைப் பாவித்து உழைக்காவிட்டால் அவருக்கு கையில் தசையும் பலமுமில்லாது போகும். அதேபோல் ஒருவர் தன் ஆத்மாவைப் பயன்படுத்தாவிடில், அவருக்கு ஆத்மசக்தியின்றியும் மனோபலமும் நற்குணத்தால் ஏற்படும் நல் வாழ்வும் இல்லாது போகும்.

— ஹென்றி டிரம்மண்ட்


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

பங்குனி மீ 20 உ (2-4-64)


## திருகோணமலைத் துறைமுகம்

திருகோணமலைத் துறைமுகம் நாட்டுக்கு வரவர அதிக சிறந்த சேவையை எப்படிச் செய்கிறதென்ற விவரத்தை இலங்கை 'சேம்பர் ஆப் காமர்ஸ்' என்ற வர்த்தகசபையின் 125-வது வருடாந்தக் கூட்டத்தில் அதன் தலைவர் விளக்கியுள்ளார். இது மகிழ்ச்சியுடன் பாராட்டத்தக்க பணியாகும்.

கொழும்புத் துறைமுகத்தை தேசஉடைமையாக்கியதுமுதல் அது பலகாரணங்களாலும் எப்படி சீர்கெட்டு வந்துள்ளதென்பதை விளக்கத் தேவையில்லை. போட்டி அரசியல் தொழிற்சங்கங்கள் தொட்டதற்கெல்லாம் திடீர் திடீரென வேலைநிறுத்தங்கள் செய்வது, மெதுவாக வேலை செய்வது, வேலைக்கு வராமல் நின்றுவிடுவது முதலிய பல்வேறு காரணங்களால், தேயிலை ஏற்றுமதி வர்த்தகத்துக்கு ஆபத்து ஏற்பட்டதும் தேயிலை வர்த்தக சங்கத்தார் 'திருகோணமலைத் தேயிலை நிர்வாகக் 'கம்பெனி'யை ஆரம்பித்து, அபிவிருத்தி செய்யப்படாத திருகோணமலை துறைமுகத்தின் மூலம் தேயிலையை ஏற்றுமதி செய்ய முனைந்தனராம்.

1957-ம் வருடத்தில் சுமார் 6 கோடி ராத்தல் தேயிலையை அத்துறைமுகமூலம் அனுப்பி இருக்கையில் சென்ற ஆண்டில் அங்கிருந்து 32 கோடி ராத்தல் தேயிலையை கப்பலில் ஏற்றி இருப்பதாக வர்த்தக சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். இது பெருமைப்படக் கூடியதுடன் திருகோணமலைத் துறைமுகம் எவ்வளவு நல்ல தேசிய சேவையைச் செய்கின்றதென்பதையும் காட்டுவதாகவுள்ளது. ஆகவே அந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதில் அரசாங்கம் இனி அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

ஏற்கெனவே பன்முறையும் இப்பத்திகளில் நாம் குறிப்பிட்டுள்ளதுபோல் வடமகாணத்தில் காங்கேசன் துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தவக்கம் செய்யக்கூடாது. நான்குபுறமும் கடலால் சூழப்பட்ட இலங்கையில் கொழும்புத் துறைமுகத்தைமட்டிலும் கோடிக்கணக்கான பணத்தில் அபிவிருத்தி செய்து மற்றத் துறைமுகங்களை அலட்சியம் செய்துவிட்ட கொள்கைதேசத்துக்கு எவ்வளவு பாதகமானதென்பதைஅரசாங்கம் உணர்ந்திருக்க வேண்டும். நாட்டின் புதிய கைத்தொழில்களில் பல ஸ்தம்பித்துள்ளதுடன் பல அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு வாழ்க்கைச் செலவுகளும் உயர்ந்து வருகின்றன. பல துறைமுகங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்குமாயின் நிலைமை இவ்வளவு மோசமாகியிராது.

இவ்விஷயத்தில் அரசாங்கத்துக்கு மட்டுமன்றி மற்றக் கட்சிகளுக்கும் அதிக பொறுப்புண்டு. சிறப்பாக இடதுசாரிக்கட்சிகளைக் குறிப்பிட வேண்டும். நாட்டின் உயிர்நிலையம் போன்ற ஒருதுறைமுகத்தை சோஷலிஸக் கொள்கையின்படி தேசஉடைமையாக்கியபின் அங்கு நிர்வாகம் மோசமாகி நாட்டு மக்களுக்குப் பெருந்தீங்கு ஏற்பட்டு வருவது சோஷலிஸக் கொள்கையை வற்புறுத்தும் இடதுசாரிகளுக்கு நிச்சயம் பெருமையளிக்க முடியாது. கொழும்புத்துறைமுகம் மேலானமுறையில் நடக்க இடதுசாரிகள் எல்லாம் பூரணமாக ஒத்துழைப்பதுடன திருகோணமலை, காங்கேசன் துறை, காலி முதலிய பலதுறைமுகங்களையும் அபிவிருத்தி செய்யவும் அவர்கள் தங்கள் பூரண ஆதரவை அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

# மூன்றரை நூற்றாண்டின் பின் விழா எடுத்துப் போற்றப்படும் குளக்கோட்டன் திருப்பணி

## பங்குனி உத்தரம் முதல் பதினெட்டு நாள் நடைபெறும் கோணநாயகர் உற்சவம்

— க. சு. சித்திரவேல் —

(தலைவர்: கோணேசர் கோயில் நிர்வாக சபை)

நீற்றுணர் ஞானசம்பந்தப் பெருமானின் உற்ற செந்தமிழாற் தேவாரப்பாமாலை பெற்ற திருப்பதியாம் திருக்கோணேஸ்வரத்தில் வரலாற்றுப் பிரசித்திபெற்ற மகா கும்பாபிஷேகம் நடைபெற்று ஓராண்டு நிறைவெய்திவிட்டது.

ஈழத்தில் மட்டுமன்றி தமிழ் கூறும் நல்லுலகிலேயே முன்தோன்றி முதன்மைத்து ஒளிர்ந்தத இச் சிவாலயத்தின் உற்சவங்களில் பலதேசத்து மன்னர்கள் கலந்து, கைகள் தலைவைத்து கண்ணீர் ததும்ப பக்திப்பிரவாகத்தில் திளைத்து, சிவனருள்பெற்று ஏகிய சிறப்புச் செய்திகளை அறியக்கிடக்கின்றது.

அருமை தெரியாத ஆதிக்க வெறியர்களின் இரக்கமற்ற அரக்கச் செயலினால் அழிவுற்ற ஆலயம் மூன்றரை நூற்றாண்டின்பின்னர் மீண்டும் உருப்பெற்று ஒளிர்கின்றது. மேன்மைகொள் சைவநீதிவிழங்க விழையும் இவ்வாலயத்தில் பல்கலை வல்லுணர்கள் தத்தம் வித்துவத் திறனை எல்லாம் அலுப்பின்றி வருகைதந்து அரசனுக்கு அர்ப்பணித்துச் சென்ற காட்சியை சென்ற ஆண்டு கண்டோம்.

### வரலாறு

வாலாற்று வல்லுனர்க்கே வரையறுத்துக் கூறமுடியாத தொன்மைமிகு இவ்வாலயத்தை, சோழகுலத்தோன்றலாகிய வரராமதேவனும், அவனைத் தொடர்ந்து அவனது மகன் குளக்கோட்டனும் பல ஆண்டுப் பெருமுயற்சியால் குன்றனைய கோபுரங்களும், மணிமதில் சூழ் மண்டபங்களோடு பிரமாண்டமான ஆலயம் அமைத்தான் என கல்வெட்டுவாயிலாக அறியக்கிடக்கிறது.

ஆதிசேடனுக்கும், வாயுபகவானுக்கும் ஏற்பட்ட பலப்பரீட்சையால் மாமேரு மலையிலிருந்து பெயர்த்தெறியப்பட்ட இரு மலைப் பளம்புகளில் ஒன்றுன தெட்சண கைலாசமே திருக்கோணேஸ்வரம் என்னும் புராணமும்—தாயின் சிவவழிபாட்டிற்காக இராவணன் அகழ்ந்தெடுத்த அரனிருந்த மலையே திருக்கோணேஸ்வரம் என்ற இதிகாசமும் மற்றும் காணபரம்பரைக் கதைகளும இவ்வாலயத்தின் தொன்மைக்கு நல்ல எடுத்துக்காட்டுகள்.

பழம்பெரும் நூல்களிலும் இவ்வாலயத்தின் பெயரும், சிறப்பும் ஆங்காங்கு பரிணகிக்கின்ன.

ஆலயம் அமைப்பதோடு மாமன்னன் குளக்கோட்டனின் மகேஸ்வர பணி நின்றுவிடவில்லை. ஆறு காலமும் பூஜை, அபிடேகம், அர்ச்சனை, உற்சவம் நாட்தவறாது கிரமமாக நடைபெறுவதற்கு நிதிவழங்க அடங்காப் பற்றென வரிப்பத்தை ஏற்படுத்தினான். தொழும்பு செய்ய அனுபவம் வாய்ந்த மூவேழு வளவர் குடிகளைத் தென்னிந்தியாவிலுள்ள காரையிலும், மருங்கூரிலுமிருந்து கப்பலேற்றினன். காலந்தவறாது தொழும்புகளைக் கவனிக்க தனியுண்ணப் பூபாலன் என்பாளை வன்னிமையாக நியமித்தான்.

"முன்னே குளக்கோட்டன்
மூட்டும் திருப்பணியை
பின்னே பயங்கி பிரிக்கவே-
மன்னுகேள்
பூனைக்கண் செங்கண்
புகைக்கண்ண ணுடபின்
மானே வடுகாய்விடும்"

என்று கல்லில் செதுக்கிய தீர்க்கதரிசனம் பலித்ததோ—அன்றேல்

"ஆணையிது தொழும்பு செய்வோர் அவரவர்க்கு அமைத்தபணி எஞ்ஞான்றும், கோணமலை நாதர்பணி செய்வாரேல் குறையகன்று குணமாய் வாழ்வார் நாணமுற்று சொன்ன பணி கூலியரை ஏவியதை நடத்து வாரேல், ஆணையினால் ஆக்கமும் சந்ததியுமற்றே அல்லலுற்றே எதுவுமின்றே அலைவரன்றே."

என்ற மாமன்னன் குளக்கோட்டன் அறம் பலித்ததோ. சிற்பமும் செல்வமுமாய் கொழித்த இச்சிவாலயத்தை கி. பி. 1924-ம் ஆண்டு இலங்கைக்கு வந்த போர்த்துக்கேய கப்பற் தளபதி கொன்ஸ்டன்ரைன் டீசா சின்னபின்னமாகச் சிதைத்து உருத்தெரியாமல் ஆக்கிவிட்டான். கலைமணக்கும் கற்களைக் கொண்டு இன்று கம்பீரமாகக் காட்சியளிக்கும் 'பிரட்டரிக்' கோட்டையைக் கட்டுவித்தான். கோட்டைச் சுவர்களில் பொருத்தப்பட்டிருக்கும் சிற்பச் சிறப்புமிக்க கற்றூண்கள் இன்றும் பார்ப்போர் மனதை வேதனைக்குள்ளாக்குகின்றன.

### உற்சவம்

பங்குனித் திங்களில் உத்தர நட்சத்திரம் கலக்கும் பங்குனி உத்தரமே கோணநாயகருக்குகந்த உற்சவகாலமாக கல்வெட்டுகள் கூறுகின்றமையால் இம்மாதம் 27-ம் திகதி கொடியேற்றமும் அதைத் தொடர்ந்து 18 திருவிழாக்களும் தீர்த்தமும் மிக விமரிசையாக நிகழுகின்றன. மாதொருபாகனை மணக்கோலத்தோடு தியானிக்கும் திருமண விரதமே பங்குனி உத்தரம்.

திருமகள் இவ்விரதம் அநுட்டித்து திருமாலைப் பெற்றாள். கலைமகளை நாவிலடையும்பேறு பெற்றான் பிரமன். இந்திரன் இந்திராணியை அடைந்தான். என்று புராணங்கள் கூறும். காளையரும் கன்னியரும் இவ்விரதம் மேற்கொண்டு "எங்கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேரற்க" என்ற வேண்டுதலை விரும்பிப் பெற வேண்டும். சிறப்பாக ஈழத்திலும் தமிழகத்திலுமுள்ள சிவனடியார்கள் இவ்வுற்சவ காலங்களில் இங்கு பெருந்திரளாகக்கூடி, தாயினும் நல்ல தலைவன் தம்மடி போற்றி தொழிலர் பாலுள்ள நோயினையும் பிணியினையும் நீக்குதல் வேண்டும்.

குளக் கோட்டுமன்னன் குறிப்பிட்ட வரிப்பத்தான கொட்டியாபுரம், தம்பலகாமம், கட்டுக்குளம் பற்றுக்களுக்கும் திருவிழாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பற்றுக்களிலுமிருந்து இருபிரதிநிதிகள் திருக்கோணேஸ்வர ஆலயபரிபாலன சபையில் அங்கத்துவம் வகிக்கின்றனர். ஏறத்தாழ மூன்றரை நூற்றாண்டின் பின்னர் குளக்கோட்டன் நியமித்த தொழும்பாரின் வாரிசுகள் கோணநாயகருக்கு விழாவெடுக்கும் பேற்றைப் பெறுகின்றனர். பண்டுபோல் கட்டைபறிச்சான், மல்லிகைத்தீவு, சம்பூர், திரியாய் ஆகிய கிராமங்களிலிருந்து சந்தனம், அகிலங்கட்டைகள், மல்லிகைப்பூச்சரம், சம்பா அரிசி, தாமரைத்திரி, நெய், தயிர், வதைத்தேன் ஆகிய ஆராதனைப் பொருட்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

### ஆய்வு கூடம்

உலக யாத்திரிகளையும், உல்லாசப் பிரயாணிகளையும் வசப்படுத்தவல்ல வனப்புமிக்க இலங்கையின் மாவட்டங்களில் திருக்கோணமலை முதன்மையும் முக்கியத்துவமும் வாய்ந்ததாகும். பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் நீலத் திரைகடல் வான் பொய்ப்பினும் தான் பொய்யா வளர் நதி மகாவலி - வற்றாத ஏரி, குளங்கள், அவை வளப்படுத்தும் நெற்கழனிகள். சகளத்துக் கார் கொஞ்சும் கல் மலைகள் அவை அரண்செய்யும் எழில் கொண்ட இயற்கைத் துறைமுகமும், தாங்கி நிற்கும் எண்ணெய்க்குதங்கள், அருகமைந்த விமானத்துறை விந்தை தரும் கன்னியா வெந்நீர் ஊற்றுக்கள் பல நாட்டு மக்களைப் பரவசப்படுத்தி உலகப் பிரசித்தி பெற்றவைகள். இரண்டாவது உலக மகா யுத்தத்தில் கிழக்காசியாவிலேயே மிக முக்கியம் வாய்ந்த தளமாகத் திருக்கோணமலை அமைந்திருந்தது.

இவ்வாறே ஈழத்தின் தொன்மை வரலாற்றிலும் திருக்கோணமலை மிக முக்கியத்துவம் வாய்ந்த இராஜதானியாகச் சிறப்புற்றிருந்தது இங்கு கோயில் கொண்டு சிவநெறி பரப்பிய செஞ்சடைக் கடவுள், செம்மேனி அம்மான் கோணநாயகரை, சேரனும் சோழனும் பாண்டியரும், பல்லவரும், சிங்கள மன்னரும், ஆரியச் சக்கரவர்த்திகளும். வன்னியரும், நாயக்கர்களும் காலத்திற்குக் காலம் தரிசித்து திருப்பணி செய்து இவ்விராஜதானியுடன் தொடர்பு கொண்டிருந்திருக்கின்றனர். சீனர் இங்கு வணிகம் செய்துள்ளனர். சீனர் வாழ்ந்த சீனக்குடாவும், கடல் அட்டை ஏற்றுமதி செய்த 'அட்டைமாலும்' இன்றும் நாம் காணக் கிடக்கின்றன.

போத்துக்கேயரும், ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் வாணிபம் செய்ய வந்து வளமான இந்நாட்டை பேய்வாய்ப் பீரங்கிகளால் கைப்பற்றி ஆண்டனர். கடற்படைத் தலைவன் அட்மிரல் வெலிங்டன், எடின்பரோ கோமகன் பேமன்றூர் வாழ்ந்த திருமனைகள் இன்றும் எழில்குன்றாது காட்சியளிக்கின்றன.

சிவநேசச்செல்வர்கள் வாழும்வரை தன் சிவ நல்வினையையும், செங்கோற் திறனையும் நெஞ்சின் நினைவில் நிலைக்கச் செய்த மாமன்னன், ஏரும், கோட்டமும் அமைத்து குளக்கோட்டன் என்ற காரணப் பெயர் பெற்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

தெருவிலே நாம் வலது பக்கம் நடப்பதா அல்லது இடது பக்கமா? மோட்டார்களும் வண்டிகளும் தெருவில் இடது பக்கம் செல்ல வேண்டுமென்பது சட்டம். நாமும் இடது பக்கம் செல்லுவதாயின், பின்னலிருந்து வரும் வண்டிகளால் நாம் ஆபத்துக்குள்ளாகலாம். நாம் தெருவில் எந்தப் பக்கம் நடக்க வேண்டுமென்று சட்டக்கண்டிப்பு இல்லாவிட்டாலும், நமது பாதுகாப்பைக் கருதி, வலது பக்கம் செல்லுவதே நல்லது என்று ஏற்படுகிறது.

* * *

ஆனால் அரசியலிலே இந்த வலது-இடது பிரச்னை நமக்கு அவ்வளவு தெளிவாகப்புரியவில்லை. வலதுசாரி நல்லதா? இடதுசாரியா? வலது பக்கம் சேர்ந்தால் இடதுக்குக் கோபம். இடது பக்கம் போனால் வலதுசாரிகளுக்குக் கோபம். இந்தத் தர்ம சங்கடத்தில் நாம் என்ன செய்வது?

நரி வலம் போனால் நல்லதா இடம் போனலா? என்று ஒருவரைக் கேட்டதற்கு, அது மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் போதும் என்று பதில் அளித்தாராம். அந்தக் கதைதான் இப்போது நமது அரசியல் அரங்கைக் கவனிக்கும் நமக்கு ஞாபகம் வருகிறது. இடதுசாரியும், வலதுசாரியும் அரசியல் பதவி வேட்டையில் இறங்கி ஒருவரை ஒருவர் காலை இழுத்து விடும் வேலையால்தான் பொது மக்களாகிய நமக்குப் பல சங்கடங்களும் ஏற்படுகின்றன.

* * *

இப்போது இடதுசாரிகள் கூட்டு அரசாங்கத்தில் சேரப் போகிறார்களா, இல்லையா? இது பற்றி முரண்பட்ட செய்திகள் கிடைக்கின்றன. இடதுசாரிகளுக்குள்ளாகவே கருத்து வேற்றுமையாம்.

"ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியிலே இடது நோக்கிச் செல்லும் சக்திகளுடன் ஒத்துழைக்கத் தாங்கள் தயார்" என்று இடதுசாரி ஐக்கிய முன்னணியின் மத்திய கூட்டுக் கமிட்டி தீர்மானித்திருக்கிறது. ஆனால் இந்தத் தீர்மானம் தங்களைக் கட்டுப்படுத்தாது என்று, இடதுசாரித் தலைவர்களில் ஒருவர் கூறுகின்றார்.

இந்தத் தீர்மானத்தின்படி பார்த்தால், சுதந்திரக்கட்சியிலேயே வலது-இடது வேற்றுமைச் சக்திகள் இருப்பதாக ஏற்படுகின்றது. இடது நோக்கி சில சக்திகள் செல்லுகின்றனவாம். அப்படியாயின், அப்படிச் செல்லாமல் வலது பக்கமே இருக்கும் சக்திகள் விஷயமென்ன? கட்சிக்குள்ளாகவே வலதுக்கும் இடதுக்கும் சச்சரவு உண்டா என்ற பல கேள்விகள் கிளம்புகின்றன.

இவையெல்லாம் பார்க்கும் போது 'பொது மக்களாகிய நமக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது நமக்குநன்மைசெய்வார்களென்று நம்பி இந்த எம். பி. மார்களைப் பார்லிமெண்ட் சபைக்கு அனுப்பி வைத்தோம். அவர்களுக்குள்ளாக எவ்வளவு வேற்றுமை இருந்தாலும், பொதுமக்களாகிய நமது நன்மையைப் பாதுகாப்பதில் அவர்கள் எல்லாரும் ஒத்துழைப்பார்களென்று நம்பினோம். ஆனால் நிலைமை முன்னிலும் பார்க்க மோசமாகிறதே ஒழிய மேம்படவேயில்லை.

இதெல்லாம் பார்க்கும் போது, இந்த "ஜனநாயகம்" எனும் முறையிலேயே அவநம்பிக்கை ஏற்படுகிறது. முன்காலத்தில் இருந்ததுபோல் மன்னர் ஆட்சி, 'ராம ராஜ்யம்' ஏற்பட்டால் நல்லது போல் இருக்கின்றது. ராம ராஜ்யத்தில் ஒரு தனி மனிதரின் உரிமையும், கருத்தும் கௌரவிக்கப்பட்டதாம். ஆனால் ஜனநாயகம் எனப்படும் இச்

(6-ம் பக்கம் பார்க்க)

# ஈராக் அதிபர் அரீப் தாயகம் புறப்பட்டார்

## இந்திய முன்னேற்றத்திற்கு பாராட்டு

பம்பாய், ஏப். 1

பாரதத்தின் அபிவிருத்தியும் சோஷலிஸப் பாதையில் அதன் முன்னேற்றமும் தம்மை வெகுவாகக் கவர்ந்துவிட்டதால் ஈராக் அதிபர் அரீப் இங்கு கூறினர்.

மகாராஷ்டிர கவர்னர் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் அளித்த விருந்தில் அவர் பேசினர். உபஜனதிபதி டாக்டர் ஸகீர் ஹுஸெய்னும் முதன்மந்திரி திரு. நாயகரும் இவ்விருந்தில் கலந்து கொண்டனர்.

ஸ்ரீமதி பண்டிட் அப்போது பேசுகையில், இந்தியாவுக்கும் ஈராக்குக்கு மிடையேயான தொன்மைத் தொடர்பைக் குறிப்பிட்டதுடன் அவரின் விஜயத்தினல் இருநாடுகளின் உறவும் மேலும் அபிவிருத்தியடையும்என நம்புவதாய்க் கூறினர்

நேற்றுமாலை பாரத-அரபு கழகம், அதிபர் அரீபுக்கு வரவேற்பு ஒன்று அளித்தது. அப்போது அவர் பேசுகையில், இந்திய உபகண்டத்துக்குள்ள பிரச்னைகளைத் தீர்க்க தாம் உதவி செய்யப்போவதாயும் கூறினர். தமக்குஅளிக்கப்பட்ட வரவேற்பிற்காக இந்திய அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

தாம் இந்தியாவில் சில நாட்கள்தான் தங்கினலும் ஆத்மீக அனுபவமும் இனிமை செறிந்த பிரயாணமும் தமக்குக்கிடைத்தது எனவும் அவர் கூறினர்.

பீல்ட்மார்ஷல் அரீப் இன்று காலை பம்பாயிலிருந்து தாயகம் புறப்பட்டார்.

# இந்திய விமானப்படையின் 31வது ஆண்டு விழா

புதுடில்லி, ஏப். 1

இந்திய விமானப்படையின் 31-வது ஆண்டுதினம் இன்று கொண்டாடப்படுகிறது. இது குறித்து விமானப்படைத் தளபதி ஏர்மார்ஷல் என்ஜினியருக்கு ஜனதிபதி ராதாகிருஷ்ணன், பிரதமர் நேரு, பாதுகாப்புமந்திரி திரு. சாவன் ஆகியோர் வாழ்த்துக்கள் அனுப்பியிருக்கின்றனர்.

"இந்திய விமானப்படை ஆரம்பிக்கப்பட்டு அதிக காலம் ஆகாவிடினும் அதன் வீரச்செயல்கள்பற்றிப் பெருமையடையலாம்" என ராதாகிருஷ்ணன் தம[து] செய்தியில் கூறியிருக்கிறர்.

நாட்டின் பாதுகாப்பில் விமானப்படை முக்கியபணி ஆற்றியுள்ளது என்றும் நாட்டுக்கு இப்போது ஆபத்து ஏற்பட்டுள்ளதால் இன்றும் பெரிய பணுவை அது ஏற்பது அவசியம் என்றும் பிரதமர் நேருவின் செய்தி கூறுகிறது.

"நேபாவிலும் லடாக்கிலும் இந்திய விமானப்படை செய்த ஒப்பந்த சேவை பாராட்டத்தக்கது" என மந்திரி சாவன் கூறியுள்ளார். கடற்படை தளபதி அட்மிரல் சோமன், ராணுவத் தளபதி ஜெனரல்சௌதரி ஆகியோரும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

ஏர்மார்ஷல் என்ஜினியர் நேற்றிரவு நிகழ்த்திய ஒலிபரப்பொன்றில் விமானப்படையின் பலத்தைப் பெருக்க ஒத்துழைக்குமாறு இளைஞர்களைக் கேட்டுக்கொண்டார்.

# "கம்பனுக்கும் வால்மீகிக்கும் ஏற்றத் தாழ்வு இல்லை"

## தேரழுந்தூர் திருவிழாவில் முதன்மந்திரி பக்தவத்சலம்

தேரமுந்தூர், ஏப்ரல் 1

தேரமுந்தூரில் நடைபெற்ற கம்பன் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி ஸ்ரீ. ஜீ. கருப்பையா மூப்பனர் தலைமையில் நடைபெற்றது. முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் துவக்க உரை நிகழ்த்தினர்.

'கம்பனைப்பற்றியும் அவன் ராமாயணத்தைப் பற்றியும் எத்தனையோ முறைகேட்டிருக்கிறேம். எத்தனை முறைகேட்டாலும், எத்தனை விழாவில் கலந்துகொண்டாலும் இதனல் சலிப்பு ஏற்படுவதில்லை. ஒவ்வொரு முறைகேட்கும்போதும் புதிய புதிய கருத்துக்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன' என திரு. பக்தவத்சலம் கூறினர்.

'வால்மீகி பெரியவனு கம்பன் பெரியவனு என்ற வாதம் அர்த்தமற்றது. ஒருவர் இல்லாமல் மற்ருெருவர் இல்லை. வால்மீகி, சிறந்த புகைப்பட நிபுணனைப்போல. கம்பன் சிறந்த சைத்ரிகனைப் போல. இருவரும் ஒவ்வொருவகையில் சிறந்தவர்கள். எவருக்கும் ஏற்றத்தாழ்வு கற்பிக்கமுடியாது என்றும் திரு. பக்தவத்சலம் குறிப்பிட்டார்.

கம்பர் தன் இராம கதையில் ஆண் பாத்திரங்களுக்கு அதிக சிறப்புக்கொடுத்திருக்கிருரா. அல்லது பெண் பாத்திரங்களுக்குச் சிறப்புக்கொடுத்திருக்கிருரா என்ற விவாதத்தில் பல ஆண், பெண் அறிஞர்கள் கலந்துகொண்டனர்.

## சோமாலியா எல்லையில் மீண்டும் சண்டை

அடிஸ் அபாபா, ஏப்ரல் 1

எதியோப்பியா—சோமாலியா எல்லையில் நேற்று மீண்டும் கைகலப்புகள் ஏற்பட்டன. சோமாலியா நகரம் ஒன்றின்மீது எதியோப்பிய விமானங்கள் குண்டு வீசியதாய்த் தெரிவிக்கப்பட்டது. ஆனல் இப்புகாரை எதியோப்பியா மறுத்துள்ளது. ராணுவ நிலை அனுமதித்தால் இன்று முதல் துருப்புக்களை வாபஸ் பெற்றுக் கொள்ளவிருப்பதாய் எதியோப்பியா அறிவித்தது.

## செரியனுக்கு பாராட்டு

சென்னை, ஏப். 1

சென்னை மேல்சபைத் தலைவர் திரு. பி. பி. செரியன் ஓய்வுபெறவிருப்பதை முன்னிட்டு மேல்சபையில் அவருக்கு புகழாஞ்சலிசெலுத்தப்பட்டது. மரியாதைப்பண்பு, திறமை, பாரபட்சமின்மை ஆகிய குணங்களுடன் அவர் செயலாற்றியது குறித்துப் பல அங்கத்தினர்கள் பாராட்டிப்பேசினர்.

## கி. பாகிஸ்தான் பத்திரிகைகள்

ராவல்பிண்டி, ஏப். 1

கிழக்கு பாகிஸ்தானில் வயது வந்தோருக்கு நேரடித் தேர்தல் உரிமை அளிக்கவேண்டுமென்ற இயக்கம்பற்றிய செய்திகளை வெளியிடுவதற்கும், இதற்கு ஆதரவளிப்போர் கைதுசெய்யப்படுவதைப் பிரசுரிப்பதற்கும் பத்திரிகைகளுக்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

## 7-ம் திகதி மந்திரிகள் சந்திப்பு

புதுடில்லி, ஏப்ரல் 1

இந்திய — பாகிஸ்தான் உள்நாட்டு மந்திரிகள் வருகிற 7-ம் திகதி செவ்வாய்க்கிழமை புதுடில்லியில் சந்தித்துப் பேசவிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## 10 கோடி ஏக்கருக்கு நீர்ப்பாசனம்

புதுடில்லி, ஏப்ரல் 1

ராஜஸ்தான் கால்வாய்த் திட்டம் விரைவாக நிறைவேறஆவன செய்யப்படும் என மின்சார மந்திரி டாக்டர் ராவ் லோகசபையில் கூறினர். காந்திஜீயின் 100-வது பிறந்ததினமான 1969-ம் ஆண்டில் நாட்டில் 10 கோடி ஏக்கர் நீர்பாசனத்துக்கு உட்படுத்தப்படும் என அவர் கூறினர்.

## ராமமூர்த்தி மீது நடவடிக்கை

கும்பகோணம், ஏப். 1

கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. டாங்கேமீது குற்றஞ்சாட்டி அறிக்கை வெளியிட்டதற்காக திரு. பி. ராமமூர்த்தி, திரு. பஸவபுன்னையா, திரு. பி. சுந்தரய்யா ஆகியோர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சிக்கவுன்சில் அகில இந்தியக் கட்சிக்கு சிபார்சு செய்திருக்கிறது.

## டி. டி. கே. ரஷ்யா போகார்

சென்னை, ஏப். 1

ஆகஸ்ட்மாதம் செப்டம்பர் ஆரம்பத்தில் நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி டோக்கியோவுக்கு விஜயம் செய்வார். சர்வதேச வங்கிக்கூட்டத்தில் கலந்து கொள்ள அவர் போகிருர். 'சமீபத்தில் சோவியத் யூனியனுக்கு நான் விஜயம் செய்வேன் என்று வந்தசெய்திகள் உண்மையல்ல' என்றும் டி. டி. கே. குறிப்பிட்டார்.

அகதிகள்

## தமிழ் நாட்டிலும் குடியேறுவர்

சென்னை, ஏப். 1

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வரும் அகதிகளில் ஒரு பகுதியினர் தமிழ் நாட்டில் குடியமர்த்தப்படுவார்கள் என்றும், இதற்கான முழுச் செலவையும் மத்திய அரசாங்கம் ஏற்கும் என்றும் மந்திரி வெங்கட்ராமன் தெரிவித்தார்.

## "48 பேர் பலியான செய்தி வெளிவரவில்லை"

### பாகிஸ்தான் சட்ட சபையில் குற்றச்சாட்டு

ராவல்பிண்டி, ஏப். 1

பலுசிஸ்தானில் பாகிஸ்தான் விமானங்கள் குண்டுவீசியதின் மூலம் 48 பேர் கொல்லப்பட்டனர் என்றும், ஒன்றரை மாதத்திற்கு முன் நடைபெற்ற இச்சம்பவத்தை பாகிஸ்தான் ரேடியோ, அல்லது பத்திரிகைகள் வெளியிடவில்லை என்றும், தணிக்கையே இதற்குக் காரணம் என்றும் சட்டசபையில்பேசிய பாக். எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டினர்.

## பிரிட்டிஷ் குண்டு வீச்சு

### சட்டசபையில் கண்டனம்

கெய்ரோ, ஏப். 1

ஏமனில் பிரிட்டிஷ் விமானங்கள் குண்டுவிசித் தாக்கியதை ஐக்கிய அராபியக் குடியரசின் சட்டசபையும், குவாய்த் சட்டசபையும் கண்டித்தன. ஐ. அ. கு. சட்டசபை ஒரு நிமிடம் மௌனம் அனுஷ்டித்தது.

# வள்ளுவர் தினத்தன்று அரசாங்க விடுமுறை

## முதன்மந்திரி பக்தவத்சலம் விதிக்கும் நிபந்தனை

சென்னை, ஏப்ரல் 1

ராஜ்யத்திலுள்ள சிறுபான்மையினரின் நலனைக் காக்க அரசாங்கம் தொடர்ந்து எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் சென்னை அசெம்பிளியில் கூறினர்.

முஸ்லிம் மக்களுக்கு முஸ்லீம் லீக் தலைவர்கள் தவருன வழிகாட்டி அவர்களுடைய நலனுக்குத் தீங்குண்டாக்குவது குறித்துத் தான் வருந்துவதாயும் அவர் கூறினர்

தேசபக்தியும், விஸ்வாசமும் கொண்ட முஸ்லிம்களை தேசவிரோதச் செயல்களைக் கைவிடுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

"ஹிந்தி'யைக் கற்க ஒருவர் மறுக்கலாம். ஆனல் ஜனநாயகத்தில், ஹிந்தி கற்க விரும்புபவர்கள் அவ்வாறு செய்யக்கூடாது எனக்கூற உரிமை இல்லை. ஹிந்தி கற்பதை விரும்பாதவர்கள் ஜனநாயகம் இல்லாத பாகிஸ்தானுக்குப் போக வேண்டும். "பாகிஸ்தான் ஜிந்தாபாத்" என இன்னும் கூறும் முஸ்லீம் லீகின் கூட்டணியாக ஹிந்தியை எதிர்க்கும் தி. மு. க. இருக்கிறது" என்றும் முதன் மந்திரி கூறினர்.

இலங்கை, பர்மாவிலிருந்து வெளியேற்றப்படும் தமிழர்களுக்கு அரசாங்கம் உதவியளித்து வருகிறதென்றும் அவர் கூறினர்.

வைகாசி அல்லது மாசி மாதம் திருவள்ளுவர் தினத்தன்று விடுமுறையளிக்க அரசாங்கம் தயார் என்றும், ஆனல் கூடுதல் விடுமுறையளிக்க முடியாதென்றும், திருவள்ளுவர் தினவிடுமுறை மற்ருேர் சனிக்கிழமையில் கழிக்கபபடவேண்டும் என்றும் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் திரு. பக்தவத்சலம் குறிப்பிட்டார்

# டில்லியில் நடைபெறவிருக்கும் கம்யூனிஸ்ட் கூட்டம்

## டாங்கே விவகாரம் பரிசீலிக்கப்படும்

புதுடில்லி, ஏப்ரல் 1

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சிலின் அவசரக் கூட்டம் வருகிற 10-ம் திகதி நடைபெறும். அதற்கு முன் ஏப்ரல் 9-ம் திகதி மத்திய நிர்வாகக் கமிட்டியின் அவசரக் கூட்டம் நடக்கும்,

இரண்டு கூட்டங்களிலும் கட்சியின் உள்விவகாரமும், வெகு ஜன இயக்கமும் விவாதத்துக்கு வரும் என கட்சியின் உத்தியோகபூர்வ பேச்சாளர் ஒருவர் கூறினர்.

டாங்கேயைத் தலைமைப் பதவியிலிருந்து மட்டுமல்லாமல் எல்லா முக்கிய பதவிகளிலிருந்தும் நீக்கி விடவேண்டும் என திரு. பி. சுந்தரய்யா, திரு. ஏ. கே. கோபாலன் உட்பட இடதுசாரித் தலைவர்கள் கோருகின்றனர்.

இடது சாரித் தலைவர்கள் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி வருவதாயும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் டாட்கேயின் வலதுசாரியினர் கோருகின்றனர்.

## 1100 பேர் கைது

புவனேஸ்வரம், ஏப். 1

வகுப்புக் கலவரத்தைத் தொடர்ந்து ஒரிஸாவில் 1100 பேர் இதுவரை கைது செய்யப்பட்டிருப்பதாக முதன் மந்திரி அறிவித்தார்.

## முஸ்லிம்லீக் கண்டனம்

சென்னை, ஏப். 1

சென்னையில் கூடியுள்ள முஸ்லிம் லீக்கின் நிர்வாகக்கமிட்டி, கிழக்குப் பாகிஸ்தானில் சிறுபான்மையினர் நடத்தப்படுவது குறித்துக் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

## எல்லைக்கோட்டில் மீண்டும் சுட்டனர்

ஸ்ரீநகர், ஏப். 1

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜம்மு யுத்த நிறுத்த எல்லையில் பாகிஸ்தானியர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் ஒருவர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## சுகர்ணேவுக்கு சுகயீனம்

ஜாகர்த்தா, ஏப்ரல் 1

இந்தோனேஷிய அதிபர் சுகர்ணே சுகயீனமுற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

## இந்தோனேஷியர் கைது

மணிலா, ஏப்ரல் 1

மணிலாவுக்குள் சட்டவிரோதமாக குடியேறியதாக 97 இந்தோனேஷியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேயிலை

## சுங்கக் கட்டணம் அகற்றப்படும்

ஜெனீவா, ஏப்ரல் 1

பெரிய அளவு பெட்டிகளில் அடைக்கப்படும் தேயிலைக்கு சுங்கக் கட்டணத்தை ஆஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் அகற்றுமென இங்கு கூடிய உலக வர்த்தக மகாநாட்டில் அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளுக்கு நன்மையேற்படுமென அறிவிக்கப்படுகிறது.

## 180 பேர் மாண்டனர்

வாஷிங்டன், ஏப்ரல் 1

அலாஸ்கா பூகம்பத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை இப்போது 180ஆக அதிகரித்துள்ளது.

## 31 பேருக்கு உபகாரச் சம்பளம்

புதுடில்லி, ஏப்ரல் 1

1963-64ம் ஆண்டு இசை, நாடகம், நடனம், ஓவியம் ஆகியவற்றில் உபகாரச்சம்பளம் வழங்க 31 பேர் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக அரசாங்க அறிவிப்பொன்று கூறுகிறது.

## நேபாளத்துக்கு உதவி

காட்மாண்டு, ஏப்ரல் 1

நேபாளத்தில் விமான மராமத்து தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு இந்தியா தொழில்நுட்ப உதவியளிக்குமென அறிவிக்கப்படுகிறது.

## பிரிவுபசாரம்

பண்டத்தரிப்பு, புதன்

பண்டத்தரிப்பில் மீன்பிடி பரிசோதகராகக் கடமையாற்றி பேசாலைக்கு மாறிச் செல்லும் திரு ஆர். கணநாதனுக்கு விளையாட்டுக்கழகம் ஒரு பிரிவுபசாரமளித்தது.

# "தெற்கும் வடக்கும் இணையும் பாலமாக அமையவேண்டும்"

## சிரமதான முகாம் கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி. பேச்சு

நீர்வேலி, புதன்

"நீர்வேலி-கைதடி ஆகிய இரு கிராமங்களையும் சிரமதானத்தின் மூலம் வீதிஅமைத்து இணைப்பதுபோல் தென்னிலங்கைக்கும் வட இலங்கைக்கும் ஒரு பாலம் அமைப்பதாகவே இம்முயற்சியில் ஒரு நல்ல சிந்தனையும் இருக்கின்றது. இதைக்கண்டு நான் மகிழ்கின்றேன். இத்தகைய முயற்சியை வரவேற்கின்றேன்" இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு.வி. என். நவரத்தினம் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற நீர்வேலி-கைதடிவீதி சிரமதான முகாம் பற்றிய பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. நவரத்தினம் மெலும் பேசியதாவது:-

"அரசியல் துறையில் இனப்பகை வளர்ந்து வரும் இந்த நேரத்தில் தென் இலங்கையிலிருந்து வரும் அன்பர்கள் இந்த சிரமதான முகாமில் எங்கள் வாலிபர்களோடு கலந்து, உடனுறைந்து, உழைத்து உணவருந்திபரஸ்பரமெருவரை ஒருவர் விளங்கில்நலுறவு வளர்த்துக் கொள்ளும் ஒரு நல்ல வாய்ப்பை ஏற்ரவி[illegible] நடக்கும் நீர்வேலி-கைதடி வீதி சிரமதான முகாம் அளிப்பதும் மிக மகிழ்ச்சிக்குரிய காரியமாகும்.

இதுபோன்ற பல முகாம்கள் வாயிலாக இந்த இனநல்லுறவை வளர்த்தால் அரசியல் நெருக்கடியின் வேகம் தணிந்து நாட்டில் அமைதியும் ஐக்கியமும் ஏற்படும் என்பது திண்ணம். நீர்வேலி கைதடி இரு கிராமங்களையும் இணைக்கும் இந்தச் சிரமதானப் பணிகளில் படித்த வாலிபர்கள், இளைஞர்கள் பங்குபற்ற வேண்டும். இத்தகைய அரிய முயற்சிக்கு வழி கோலிய காந்திய சேவா சங்கம் பாராட்டுக்குரியது."

அடுத்து கோப்பாய் எம்.பி. திரு. மு. பாலசுந்தரம் பேசியதாவது:-

இந்த நாட்டின் பொருளாதார நிலை இருக்கும் முறையில் அரசாங்கம் எங்களுக்கு எல்லாத் தேவைகளையும் செய்து உதவும் என எதிர்பார்க்க முடியாது. மக்கள் தங்கள் தேவைகளை சுயமுயற்சியினாலேயே பூர்த்தி செய்கின்ற காலம் வந்து விட்டது. அதற்கு இந்த சிரமதான முகாம் நல்ல பயிற்சி. புனிதமான காந்திய-சர்வோதய தத்துவத்தின் வழி நின்று இனப்பகைகளை தோற்றுவி[illegible] துறைகளுக்கும் அப்பால் உள்ள ஒருதூய பண்பு நிலையில் நின்று-தேச முன்னேற்றத்துக்கான இத்தகைய நல்லெண்ணங்களை இதுபோன்ற சிரமதானமுகாம்கள் வாயிலாக வளர்க்க முற்பட்ட காந்தி சேவா சங்கத்தாரை பாராட்டுகின்றேன். நீர்வேலி-கைதடி வீதி அமைப்பதால் எதிர்காலத்தில் அவ்விருகிராமங்களுக்கும் நன்மை மாத்திரமல்ல தென்மராட்சிக்கும் வலிகிழக்குக்கும் பெரிய நன்மையாகும்.

முன்னாள் சர்வகலாசாலை விரிவுரையாளரும் காந்திய சேவா சங்கத் தலைவருமாகிய திரு கே. நேசையா பேசியதாவது:-

நீர்வேலி கைதடிவீதியை சிரமதான மூலம் அமைப்பதில் உள்ள நன்மைகளை நாம் சிந்திப்போம். இம்முயற்சி போக்குவரவுக்கு உதவியாகும் ஒரு தேசியப் பணியாகும். வினோபாஜீ [illegible] போல் ஜனசக்தியைத் திரட்டி நல்ல ஆக்க கருமங்களுக்கு உபயோகிக்கும் பழக்கம் உண்டாகும். ஜனசக்தி[illegible] முன் எந்த அதிகாரமும் அ[illegible]கூட எதிர்த்து நிற்[illegible] முடியாது. அந்த ஜனசக்தி[illegible] எல்லோரும் பங்கா[illegible] ஆகின்ற[illegible]. நாட்டில் அன்பை வழர்த்து சர்வோதய சமுதாயத்தை வளர்க்கும் பணியில் ஈடுபடுபவர்களாகின்றோம். இந்த அன்பு சிரமதான முகாமில் உருவாகி அயல் கிராமங்களில் பரவி பின்பு தேசம் எங்கும் செறியும். இதனால் தேசத்தில் மக்கள் ஒற்றுமையை ஏற்படுத்துகின்றோம். இந்த சிரமதான இயக்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் ஈடுபட்டுழைக்க வேண்டும்.

கூட்டத்துக்கு முதலியார் செ. சின்னத்தம்பி தலைமைவகித்தார். திரு. இ. வேலாயுதர், திருமதி வேதவல்லி-கந்தையா, திரு. க. வே. கனகரத்தினம் ஆகியோரும் பேசினர்கள்.

---

## ஆசிய-ஆபிரிக்க மகாநாடு இலங்கைகலந்துகொள்ளும்

கொழும்பு, புதன்

ஜாகர்த்தாவில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க மகாநாட்டில் இலங்கையும் கலந்துகொள்ளுமென்று இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர்சுபந்திரியோவுக்கு அறிவித்துள்ளார்.

ஏப்ரல் மாதம் பத்தாம்திகதி நடைபெறவிருக்கும் இம்மகாநாட்டிற்குச் செல்லும் இலங்கைத் தூதுகோஷ்டிக்கு திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தலைமை வகிப்பார் எனத் தெரியவருகிறது.

---

## இந்து இளைஞர் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

சித்திரை வருஷப்பிறப்பை அடுத்து நடைபெற இருக்கும் தங்களின் 16-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஏப்ரல் மாதம் 14-ம் திகதி காலை திருநெல்வேலி கிழக்கு வைரவர் கோவில் வாசல் இந்து இளைஞர் இயக்கத்தார் அகில இலங்கை வீர, வீராங்கனைகளுக்கிடையே ஒரு விளையாட்டுப். போட்டியை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

இவ்விளையாட்டுப் போட்டியில் 25 மைல் ஆண்கள் சைக்கிளோட்டப் போட்டி, 5 மைல் பெண்கள் சைக்கிளோட்டப் போட்டி, 3 மைல் ஆண்கள் காலோட்டப் போட்டி, 1 மைல் சிறுவர் காலோட்டப் போட்டி. என்பன முக்கிய அம்சமாக இடம்பெறும்.

எதுவித வயதுக் கட்டுப்பாடுமின்றி நடைபெறும் 25 மைல் ஆண்கள் சைக்கிளோட்டப்போட்டி, 5 மைல் பெண்கள் சைக்கிளோட்டப் போட்டி, 3 மைல் ஆண்கள் காலோட்டப் போட்டி என்பனவற்றில் அகில இலங்கையின் எந்தப் பகுதியிலும் உள்ள சங்கங்களைச் சேர்ந்த வீரர்களும் தனிப்பட்ட வீரர்களும் பங்குபற்றலாமென்றும் ஆனால் 1 மைல் காலோட்டப் போட்டியில் அகில இலங்கையிலுமுள்ள 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மாத்திரம் பங்குபற்றலாமென்றும் அறிவிக்கப்படுகிறது.

---

## மரண விசாரணை அதிகாரி

யாழ்ப்பாணம், புதன்

'பெண்ணின மரணத்துக்கு ஆஸ்பத்திரி நிர்வாகமே காரணம்' என்ற தலைப்பில் சென்ற வியாழக்கிழமை 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த செய்தியில் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் அபிப்பிராயம் தெரிவித்தார் என்பதற்குப் பதிலாக டாக்டர் சி. சிவஞானசுந்தரம் எனத் தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுவிட்டது.

---

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## பதுருத்தீன் புலவர் யாழ்ப்பாண வாசியா?

முகையதீன்புராணம் எழுதிய மஷாயிக் பதுருத்தீன் புலவர் யாழ்ப்பாண வாசி எனச் சிலர் கூறுகின்றனர். ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்ற நூலில் திரு. கனகசெந்திநாதன் அவர்களும் இப்படியே எழுதியிருக்கின்றார். உண்மையில் இவர் யாழ்ப்பாண வாசியல்ல. இவர் மூதாதைகள் தென்னகத் திருநெல்வேலி மாவட்டம், காயல்பட்டினத்துக்குச் சமீபத்தில் உள்ள சோனகன் பட்டினமாகிய சோனகன் விளையைச் சேர்ந்தவர்கள். பிற்காலத்தில் சென்னையில் குடியேறி யாழ்ப்பாணத்துடன் வர்த்தகம் செய்தவர்கள். அதுகாலை பதுருத்தீன்புலவர் அவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கி தமிழ்படித்துப் பண்டிதரானவர். இவர் காலத்தில் யாழ்ப்பாணம் தமிழ் துறைக்குக் கலங்கரை விளக்காய் இருந்தது என்பர்.

எனது கருத்துப் பிழையென எவரும் எடுத்துக்காட்டி 'ஈழநாடு' பத்திரிகையில் விளக்கமாக எழுதுவார்களாயின் மிகநன்றியுடன் ஏற்றுக் கொள்வேன். இதுபற்றி திரு. சு. நடேசபிள்ளை அவர்களுக்குத் தெரியலாமெனநினைக்கிறேன். பதுருத்தீன் புலவர் யாழ்ப்பாண வாசியாக இருந்திருப்பாராயின் பெருமையடைவேன்.

அல்-ஹாஜ் வ. மி. ஷம்சுதீன், கொழும்பு.

★

## பொலிஸ் நிலையம்

ஆனைக் கோட்டையிலுள்ள பொலிஸ் நிலையம் கொக்குவிலுக்கு மாற்றப்படவிருப்பதாகத் தெரிகிறது. 1936-ம் ஆண்டிலிருந்து மானிப்பாயிலும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களிலும் காடைத்தனமும் குற்றச் செயல்களும் அடிக்கடி நடைபெற்றுவந்தன. யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்கள் உச்சக்கட்டத்தை அடைந்த சமயத்தில் ஆனைக்கோட்டையில் ஒரு பொலிஸ் நிலையத்தைத் திறப்பதற்கு நாம் முயற்சி செய்து வெற்றி பெற்றோம். பொலிஸ் நிலையம் திறக்கப்பட்டும் குற்றச் செயல்கள் நடைபெறுகின்றன. இந்நிலையில் பொலிஸ் நிலையம் இல்லாதிருந்தால் எப்படியிருக்கும்? எனவே ஆனைக்கோட்டையிலிருந்து பொலிஸ் நிலையத்தை கொக்குவிலுக்குக் கொண்டு செல்வதை மானிப்பாய் மக்கள் ஆட்சேபிப்பர்.

கே. எஸ். சௌந்தரநாயகம். மானிப்பாய்.

---

## தொல்புரம் இந்துசமய விருத்திச் சங்கம்

சுழிபுரம், புதன்

தொல்புரம் இந்துசமய விருத்திச்சங்கத்தின் புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் தொல்புரம் மாணமுதலியார் மடத்தில் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. தலைவராக திரு. வே. கார்த்திகேசுவும், உபதலைவர்களாக திருவாளர்கள் அ. தையல்பாகர், மு. சிற்றம்பலம் ஆகியோரும், காரியதரிசியாக திரு. ந. மகாதேவனும், உபகாரியதரிசியாக திரு. ச. கைலாசபிள்ளையும், தனாதிகாரியாக திரு. கு. கணபதிப்பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாகசபை உறுப்பினர் விபரம் வருமாறு:

திருவாளர்கள் வே. ஆறுமுகம், அ. தியாகராசா, எஸ். கோவிந்தபிள்ளை, க. பொன்னம்பலம், இ. வைரமுத்து.

---

## காயப்படுத்தியதாக வழக்கு

ஊர்காவற்றுறை, புதன்

சரவணையைச்சேர்ந்த சூரியவத்தைவாசிகளான வேதநாயகம், பொன்னுக்கோன், சவிரி ஆகியோர் அதே இடத்தைச் சேர்ந்த ம. செல்லன் என்பவரை கத்தியாலும் மண்வெட்டிப்பிடியாலும் தாக்கியதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதிபதி திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. காயமடைந்த செல்லன் முதலாவது சாட்சியமாக விசாரிக்கப்பட்டார் மேல் விசாரணை வைகாசிமாதம். 7-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

---

## திருவிழாவில் சமயச் சொற்பொழிவு

ஊர்காவற்றுறை, வியா'

புங்குடுதீவு மடத்து வெளி ஸ்ரீபாலசுப்பிரமணிய தேவஸ்தான 2-ம் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இரவு திரு. கே. பி. ஹரன் நிகழ்த்தவிருக்கும் சமயச் சிறப்புரையைத் தொடர்ந்து "முருகோதயம்" என்னும் விடயம் பற்றி அகில இலங்கைப் பொதுசன சேவைச் சங்கத்தைச் சேர்ந்த செல்வி நல்லபிள்ளை நாகமுத்து சொற்பொழிவு நிகழ்த்துவார். அடுத்து 'தக்கன் செருக்கும் வேள்வியும்" என்னும் பொருள்பற்றி ஆசிரியர் திரு. வி. க. ஆறுமுகம் சங்கீதகதாப் பிரசங்கம் நிகழ்த்துவார் எனவும் அறிவிக்கப்படுகிறது.

---

## கனிஷ்ட கட்டழகன்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண கனிஷ்ட கட்டழகனாகத் தெரிவு செய்யப்பட்டவர் எஸ். மிருதின்ஜெயம் என்பவராகும்.

---

## அளவெட்டியில் இசைக்கலைமன்றம்

அளவெட்டி, புதன்

அளவெட்டி சதானந்த வித்தியாசாலையில் சென்ற திங்கட்கிழமை நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அளவை இசைக்கலை மன்றம் என்னும் பெயருடன் ஒரு சங்கம் அமைக்கப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. மன்றத் தலைவராக திரு. செ. மயில்வாகனமும் உப தலைவராக திரு. தா. பொன்னம்பலமும் இணைக் காரியதரிசிகளாக திரு. மு. செல்லையா, சங்கீதபூஷணம் க. நடராசாவும் தனாதிகாரியாக திரு. வ. நடேசவும் தெரிவுசெய்யப்பெற்றனர்.

இசை வகுப்புகளை நடத்துவதென்றும் வைகாசிமாதத்தில் அளவெட்டியில் இசை விழா நடத்துவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

---

## விளையாட்டுப் போட்டி

ஊர்காவற்றுறை, புதன்

சரவணை சேவாமன்றத்தினர் சித்திரை வருடப்பிறப்பன்று விளையாட்டுப்போட்டி ஒன்றை நடத்த முடிவு செய்துள்ளனர்.

சரவணை நாவலர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் இந்த விளையாட்டுப்போட்டியில் சரவணை இளைஞர்கள் மாத்திரம் பங்குபற்றுவார்கள் எனத் தெரியவருகிறது.


றீகல் (யாழ்ப்பாணம்)

REGAL — JAFFNA

NOW SHOWING

Daily at 4-45, 7-00 & 9-45 p. m.

Morning Shows
Sats. & Suns. at 10-30 a. m.

DEAN MARTIN
in
SONGS IN THE WORLD

( Totalscope—Colour ) 81

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனி வீதி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை)
விஜிதா (ஹட்டன்) மொடேர்ன் (பதுளை) வெம்பிளி (கண்டி)
கல்யாணி (நாவலப்பிட்டி)

எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
எம். ஆர் ராதா—டி. ஆர். ராஜகுமாரி
எஸ். ஏ. அசோகன்—நாகேஷ்
மற்றும் பலர் நடித்த

ஆர். ஆர். பிக்ஸர்ஸ்

பெரிய இடத்துப் பெண்

டைரக்ஷன்: ராமண்ணா
இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடல்கள்: கண்ணதாசன்
கதை-வசனம்: சக்திகிருஷ்ணசாமி

# வவனியா பகுதி கி.ச. தேர்தல் அபேட்சகர் விபரம்

வவனியா, புதன்

மேற்பற்று கிராமசபைத் தேர்தலில் இரண்டாம் வட்டாரத்தைத் தவிர்ந்த இதர 9 வட்டாரங்களிலும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்கள் வருமாறு:

1-ம் வட்டாரம்: திரு எஸ். யு. சிவராசா.

3-ம்வட்டாரம்: திரு.எஸ். சூரி.

4-ம் வட்டாரம்: எம். சண்முகம்.

5-ம்வட்டாரம்: திரு.வி. செல்லத்துரை.

6-ம் வட்டாரம்: திரு. கே. பொன்னம்பலம்.

7-ம் வட்டாரம்: திரு. வி. சபாபதிப்பிள்ளை.

8-ம் வட்டாரம்: திரு. எஸ். யு. சதாசிவம்.

9-ம் வட்டாரம்: திரு. ரி. பொன்னம்பலம்.

10-ம் வட்டாரம்: திரு. ரி. கந்தையா.

இரண்டாம் வட்டாரத்தில் திரு. எஸ். முத்தையா, திரு. எஸ். பெரியதம்பி ஆகிய இருவரும் போட்டியிடுகின்றனர்.

## கருநாவல்பற்று தெற்கு கிராமசபை அபேட்சகர் விபரம்

1-ம் வட்டாரம்:- திருவாளர்கள்: எம். சோமு, என். இரத்தினம்.

2-ம் வட்டாரம்:- திருவாளர்கள்: கே. பொன்னம்பலம், வி. பொன்னையா.

3-ம் வட்டாரம்:- திரு. ச. வாரித்தம்பி.

4-ம் வட்டாரம்:- திரு. எஸ். கந்தையா.

5-ம் வட்டாரம்:- திரு. தம்பையா.

6-ம் வட்டாரம்:- திருவாளர்கள்: எம். கந்தையா; எஸ். செல்லத்துரை.

7-ம் வட்டாரம்:- திரு. வி சிற்றம்பலம்.

8-ம் வட்டாரம்:- திரு. கே. காசித்தம்பி, திரு.எஸ். சிவக்கொழுந்து.

9-ம் வட்டாரம்:- திரு. வி. சிவசம்பு.

## உடையாலூர் கிராமசபை

1-ம் வட்டாரம்:- திரு. கே. பொன்னம்பலம்.

2-ம் வட்டாரம்:- திருவாளர்கள்: கே. சபாரத்தினம், ரி. சதாசிவம்.

3-ம் வட்டாரம்:- திரு. எம். நடராசா.

4-ம் வட்டாரம்:- திருவாளர்கள்: கே. நவரத்தினம், வி. பரராசசிங்கம், பி. சிவஞானம்.

5-ம் வட்டாரம்:- திருவாளர்கள் ரி. கனகசிங்கம், எஸ். கார்த்திகேசு.

6-ம் வட்டாரம்:- திருவாளர்கள்: ஆர். கணபதிப்பிள்ளை, ஏ. பொன்னம்பலம், எம். சுப்பிரமணியம்.

7-ம் வட்டாரம்:- திருவாளர்கள்: வி. செல்லையா, வி. தருமலிங்கம்.

8-ம் வட்டாரம்:- திரு. பி. கனகு.

9-ம் வட்டாரம்:- திரு. வி. சோதிநாதன்.

## சின்னச் செட்டிகுளம் கிழக்கு கிராமசபை

1-ம் வட்டாரம்: திரு. ஏ. பொன்னம்பலம், திரு. எல். சுந்தரம்பிள்ளை.

2-ம் வட்டாரம்: திரு. ஏ.அருளப்பு.

3-ம் வட்டாரம்: திரு. ஏ. சுல்தான், திரு எஸ். நவரத்தினராஜா, திரு. எஸ். நடராஜா.

4-ம் வட்டாரம்: திரு. ஏ. செபரத்தினம், திரு. பி. மரியநாயகம், திரு. எஸ். கணபதிப்பிள்ளை.

5-ம் வட்டாரம்: திரு. பி. செல்வநாயகம்.

6-ம் வட்டாரம்: திரு. ரி. மயில்வாகனம்.

7-ம் வட்டாரம்: திரு. எஸ். சி. சவுந்தரநாயகம்.

8-ம் வட்டாரம்: ஜனாப் எம். நாகூர்கனிப், ஜனாப் சாகூல் அமீட்.

9-ம் வட்டாரம்: ஜனாப் அப்துல் மஜீட்.

10-ம் வட்டாரம்: திரு. எஸ். பிலிப்பையா.

11-ம் வட்டாரம்: திருவாளர்கள் எஸ். ஐயம்பிள்ளை, ஏ. அம்பலவாணா, கே. மாரிமுத்து, ஏ. சிவகுருநாதன், எஸ். சுப்பையா, எஸ். தர்மலிங்கம்.

## சின்னச் செட்டிகுளம் மேற்கு கிராமசபை

1-ம் வட்டாரம்: திருவாளர்கள் பி அருள்லிங்கம், ஏ. கார்த்திகேசு, எம். குமாரசுவாமி, எஸ். யு. மரியாம்பிள்ளை, கே. நாகமணி.

2-ம் வட்டாரம்: திருவாளர்கள் எம். பழனி, என். வயித்லிங்கம்.

3-ம் வட்டாரம்: ஜனாப் கே. மொகமெட், ஜனாப் ஏ. சகாப்டீன்.

4-ம் வட்டாரம்: ஜனாப் ஏ. அப்துல் கபூர். ஜனாப் எம். மாதர்மொகிடீன்.

6-ம் வட்டாரம்: ஜனாப் எஸ். சாகுல் அமீது, ஜனாப் ரி மொகமட் இஸ்மாயில்.

7-ம் வட்டாரம்: திரு. ஏ குமாரசேகரம், ஜனாப் ஏ. நாகூர்கனி, ஜனாப் ஏ. சுலைமான் லெப்பே, திரு. கே. தங்கராஜா.

திரு. கே. சுப்பிரமணியம் 5ம் வட்டார அங்கத்தவராக போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்.

## கிழக்கு மூலை வடக்கு கிராம சபை

1-ம் வட்டாரம்: திருவாளர்கள் என். வெற்றிவேலு, எஸ். வேதாரணியம்.

2-ம் வட்டாரம்: திரு. ஏ. கந்தப்பு

3-ம் வட்டாரம்: திருவாளர்கள் கே. சோமசுந்தரம், வி. விஜைசித்தம்பி.

4-ம் வட்டாரம்: திரு. கே. சிவகுரு

5-ம் வட்டாரம்: திருவாளர்கள் எம். கந்தையா, ஏ. கணபதிப்பிள்ளை, பி. மயில்வாகனம்.

6-ம் வட்டாரம்: திருவாளர்கள் எஸ். ஐயம்பிள்ளை, ஏ. தம்பிராசா,

8-ம் வட்டாரம்: திரு. ஏ. வெற்றிவேலு

9-ம் வட்டாரம்: திரு. எஸ். சம்பந்தர்

10-ம் வட்டாரம்: திரு. கே. கணபதிப்பிள்ளை.

11-ம் வட்டாரம்: திரு. ஏ. வீரகத்தி

12-ம் வட்டாரம்: திரு. எஸ். கணேசன்

13-ம் வட்டாரம்: திரு. கே. செல்வநாயகம்

14-ம் வட்டாரம்: திரு. எஸ். கார்த்திகேசு

2-ம், 4-ம், 8-ம், 9-ம், 10-ம், 11-ம், 12-ம், 13-ம். 14-ம் வட்டாரங்களில் அபேட்சகராக வேறு எவரும் மனுப்பத்திரம் தாக்கல் செய்யாததினால் மேற்படி வட்டாரங்களுக்கு மனுப்பத்திரம் தாக்கல்செய்த அபேட்சகர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் அதிகாரி அறிவித்தார்.


# தேசிய லொத்தர் சுவீப்புக்கள்

3வது சுவீப்
முதல் பரிசு
ரூபாய் 50,000-00

மொத்த நிதிக்கு
செலுத்தப்பட்ட தொகை
ரூபாய் 1,09,273-50

## 4வது சுவீப்

**சீட்டிழுப்பு:** 1964, ஏப்ரல் 2-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4-15 க்கு யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் நடைபெறும். பொதுமக்கள் சமூகமளிக்குமாறு அழைக்கப்படுகிறார்கள்.

**விற்பனைகள்:** 20-3-64 தொடக்கம் 2-4-64 பிற்பகல் 4-15 வரை.

**4-வது சுவீப்:** சீட்டுகள் வெள்ளைப் பாதுகாப்பான தாளில் "இலங்கை தேசிய ஆஸ்பத்திரி சுவீப்" என்னும் பெயர்களை முழுதாகவோ, அல்லது பகுதியாகவோ வாட்டர் மார்க்காகக் கொண்டிருக்கும்.

பின்வரும் முக்கிய குறிப்புக்களுடன் எழுத்துக்கள் சிவப்பாகவும், எண்கள் கறுப்பாகவும் அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டதாக டிக்கட் இருக்கும்.

**எண்கள்:** 01 A — 22 A 0001 — ஒவ்வொரு தொடக்கத்துக்கும் 1000
01 A — 22 B 0001 " " 1000த்திலிருந்து
I எழுத்தை விட எல்லா எழுத்துக்களுக்கும் இருக்கும்.

### பணம் செலுத்துதல்

முதலாவது, இரண்டாவது, மூன்ருவதும், பரிசுகளுக்குரிய டிக்கட்டுகளும் மற்றும் முதல் ஐம்பது ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகளும் 1964 ஏப்ரல் 6 திங்கட்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் பகல் 11-00 மணி வரைக்கும் பணம் செலுத்தப்படுவதற்கு ஏற்றுக்கொள்ளப்படும். மிகுதியான ஐம்பது ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகள் 1964 ஏப்ரல் 7 செவ்வாய்க்கிழமை ஏற்றுகொள்ளப்படும். 7-ந்திகதி காலை 11-00 மணிக்குப் பின்னர் கொண்டுவரப்படும எந்த டிக்கட்டுக்காவது 1964 ஏப்ரல் 9-ந் திகதி வியாழக்கிழமை பணம் தரப்படும். சீட்டு இழுப்பு நடைபெற்று 6 மாதங்களுக்குப் பின்னர் கொண்டுவரப்படும் எந்த ஒருடிக்கட்டாவது பணம் செலுப்படுவதற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

### கிழிந்த அல்லது உருக்குலைந்த டிக்கட்டுகள்

கிழிந்த அல்லது உருக்குலைந்த சீட்டுச் சொந்தக்காரர் அவ்வித சீட்டின் பெயரால் எவ்வித பணமும் பெற உரிமையற்றவராக இருப்பார். ஆனால் இவ்வித டிக்கட்டை ஏற்றுக்கொண்டு அதற்குப் பணம் செலுத்துவதற்கோ, அல்லது மறுக்கவோ தேசிய லொத்தர் சபைக்கு உரிமையுண்டு. விற்பனவு,சீட்டிழுப்பு அல்லது பரிசுப்பணம் செலுத்துதல் சம்பந்தமாக ஏற்படும் எந்தத்தகராறையும் தேசிய லொத்தர் சபை தீர்த்துக்கொள்ளும். அவர்களுடைய முடிவு இறுதியானதாகவும் சட்டபூர்வமானதாகவும் இருக்கும்.

இன்றே ஒரு தேசிய சுவீப் டிக்கட்டை வாங்குங்கள்

சபையின் கட்டளைப்படி
எச். பி. வீரரத்தின
முகாமையாளர்
தேசிய லொத்தர் சபை


## வானொலிநிகழ்ச்சிகள்

### வியாழன் 2-4-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மன்றம், 5-45 திரை இசை

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட், 7-00 பேச்சு — 'நாடும் நாமும்', 7-45 தொடர்நாடகம் — மட்டக்களப்பு மாப்பிள்ளை — எஸ். பொன்னுத்துரை எழுதியது, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 லயவின்யாசம் — சந்தான கிருஷ்ணன், 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-30 துதிப்பாடல்கள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல்இசை, 2-10 கல்வி ஒலிபரப்பு.

மாலை 5-15 துதிப்பாடல்கள், 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 நூல் மதிப்புரை, 7-45 ராகம், தானம், பல்லவி — முடிகொண்டான் வேங்கடராமஐயர் — பாட்டு, 8-40 குரல்இசை, 9-15 சுபத்த சங்கீதம்.


## அரைச்சலார்

அநேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னாகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

## விற்பனைக்கு

உடுவில் கிழக்கு, கற்பகப் பிள்ளையார் கோவிலுக்கருகாமையில், நாயுருவியும் வேல்குடையமும் என்னும் பெயருடைய காணி நிலப்பரப்பு 10 விற்பனைக்கிருக்கிறது. விபரங்களுக்கு: க. சின்னத்துரை, நீர்வேலி. 201


## மரண அறிவித்தல்

### சவிரிமுத்து லூசியாப்பிள்ளை

யாழ். ஆஸ்பத்திரி சிக்கன கடன் நிவர்த்திச் சங்க அங்கத்தவரும், யாழ். வைத்தியசாலையில் பெண்பணியாளராகக் கடமையாற்றுபவருமாகிய திருமதி J. பிரான்சிஸ் அவர்களது தாயார் சவரிமுத்து லூசியாப்பிள்ளை காலமாகிவிட்டார். அன்னாரது பூதவுடல் 2-4-64 வியாழக்கிழமை பிற்பகல் பெரிய கோவில் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

செ. துரைசிங்கம், மரண சகாயகாரியதரிசி, நம். 16,மாட்டின் ரோட், யாழ்ப்பாணம்
1-4-64 203

## யாழ்ப்பாண மாநகரசபை

### 1964-ம் வருடத்திய வரிமதிப்புப்புத்தகங்கள்

1964-ம் வருடத்திற்கான வரி மதிப்புப் புத்தகங்கள் தற்போது தயாராகவிருப்பதையும், அலுவலக நேரத்தில் அவை மாநகர அலுவலகத்தில் பார்வைக்குக் கிடைக்குமென்பதையுமிட்டு, 1947-ம் வருட, 39-ம் இல. மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 235 (1)இன் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

டி. டி. ஜெயசிங்க,
மாநகர ஆணையாளர்.

மாநகர அலுவலகம்,
மாநகர மண்டபம்,
யாழ்ப்பாணம்.
பங்குனி 30, 1964. 301

## பொது அறிவித்தல்

1956-ம் வருட இலங்கைச் சட்ட ஆக்கங்களின் 158-ம் அதிகாரத்தின் பிரகாரம் திருத்தப்பட்ட 1946-ம் ஆண்டின் நிறுவை, அளவைக் கட்டளைச் சட்டம் இல. 37, பிரிவு 32 (3) இன் கீழ், யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் சகல வியாபாரிகளுக்கும் கீழ்வரும் அறிவித்தல் இத்தால் கொடுக்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் சகல வியாபாரிகளும் 12 மாதகால எல்லைக்குள் அல்லது இதற்கு முன்பு தங்கள் நிறுவை அளவைக் கருவிகளை, நிறுவை, அளவைப் பரிசோதகரிடம் காட்டி அங்கீகார அடையாளமாக 1964-ம் ஆண்டு ஏப்ரல் 30-ம் திகதி அல்லது அதற்கு முன்னர் முத்திரையிட்டுக் கொள்ளாது வைத்திருந்தால் 1946-ம் ஆண்டின் நிறுவை அளவைக் கட்டளைச் சட்டம் இல. 37, பிரிவு 41 இன் பிரகாரம் சட்டத்தை மீறியதாகக் குற்றம் சாட்டப்படுவதுமல்லாமல் ரூபா 100க்கு மேலதிக அபராதமும், மூன்று மாதகாலத்திற்கு மேலாகாத சிறைத்தண்டனை இரண்டில் ஒன்றும் அல்லது அபராதமும் சிறைத்தண்டனையும் விதிக்கப்படுவதற்கு ஏதுவாய் இருக்கும்.

அலுவலக நேரத்தில் தினமும்பிற்பகல் 2-00 மணியிலிருந்து 4-00 மணிவரை வியாபாரிகளின் நிறுவை அளவைக் கருவிகள் முத்திரையிடப்பட்டுக் கொடுக்கப்படும்.

டி. டி. ஜெயசிங்க,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
13-3-1964 302


## வரி விளம்பரம்

### தேவை

அனுபவம் வாய்ந்த கைத்தறி நெசவாளர்கள் தேவை. வேலைக்கேற்ப வேதனம் கொடுக்கப்படும். விடுதி வசதியும் உண்டு. 4-4-64 சனிக்கிழமைக்கு முன்னர் நேரில்வந்து சந்திக்கவும். "வள்ளுவன் கைத்தறி", கண்வைத்தியர்ஒழுங்கை, அளவெட்டி. 87

### றேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. சுலைமான் கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர்
கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.

# மொழிப் பிரச்னை ஜூன் 5க்கு முன் தீரவேண்டும்

## இல்லையேல் மீண்டும் நேரடி நடவடிக்கை”

### தமிழரசுக் கட்சிக் கிளைகள் வற்புறுத்து

யாழ்ப்பாணம், வியாழன்

“தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்மீது பிறப்பிக்கப்பட்ட கட்டாய ஓய்வுஉத்தரவுகளையும் அதுசம்பந்தமான அறிக்கைகளையும் உடனடியாக வாபஸ் பெற்று, மொழிப்பிரச்னைக்குச் சுமுகமான தீர்வுகாண வேண்டுமென்ற நோக்கத்தை விரைவில் செயல்படுத்தி ஜூன் ஐந்தாந்திகதிக்கு முன் மொழிப்பிரச்னை சம்பந்தமாக அரசாங்கம் ஒரு சமரச உடன்பாட்டுக்கு வரத் தவறினால் தமிழரசுக்கட்சி உடனடியாக நேரடி நடவடிக்கையிலிறங்க வேண்டும்” என்று தமிழரசுக்கட்சியின் உடுப்பிட்டிகிளை கட்சித் தலைமைப்பீடத்தை ஒரு தீர்மானத்தின்மூலம் வற்புறுத்தியுள்ளது.

மொழிப்பிரச்னைக்குச் சமரசத்தீர்வு காணும் நடவடிக்கைகள் யாவும் ஜூன் ஐந்தாந்திகதிக்கு முன்னர் முடிவடைய வேண்டுமென்றும் அரசாங்கம் மேலும் காலத்தைக் கடத்தினால் தமிழரசுக்கட்சி மீண்டும் தனது எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டுமென்றும் மேலும் சில கட்சிக் கிளைகள் தமிழரசுக்கட்சித் தலைமைப்பீடத்தைக் கேட்டுள்ளன.

தலைமையில் நடைபெற்ற தமிழரசுககட்சியின் உடுப்பிட்டிக் கிளைக்கூட்டத்தில் தமிழ்பேசும் அரசாங்க ஊழியர் சம்பந்தமாக அரசாங்கம் நிர்வாக ரீதியில் எடுத்துவரும் நடவடிக்கைகள், மொழிப்பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லையே என்பதையேகாட்டுவதாகஉள்ளதெனஅங்குநிறைவேறிய ஒரு தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. சே. ஜெயக்கொடி

---

வடபகுதி அசைஸ்

## “எதிரியென வேறொருவரை அடையாளம் காட்டினர்”

### ஊரணி கொலை முயற்சி வழக்கில் பதில் நீதிபதி சாட்சியம்

யாழ்ப்பாணம், வியா.

அடையாள அணிவகுப்பின் போது எதிரிகளல்லாத செல்லப்பா வைரமுத்து என்ற வேறொரு நபரை எதிரிகளில் ஒருவரென சாட்சிகளான தங்கராசாவும், ராஜரத்தினமும், அடையாளம் காட்டினர்களென்று பதில் நீதிபதி திரு. இளையதம்பி, நேற்று நடைபெற்ற ஊரணி கொலைமுயற்சி வழக்கில் சாட்சியமளிக்கும் போது கூறினர்.

ஊரணி கொலைமுயற்சி வழக்கு நேற்று காலை நான்காவது தினமாக தொடர்ந்து நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு தம்பையா கியு. சி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எல்லா சாட்சிகளும் 1-ம் எதிரியான வல்லிபுரம் நடராசாவை அடையாளம் காட்டினர்களென்று ஜுூரிகள் முதல்வர்கேட்ட கேள்வியொன்றிற்கு பதிலளிக்கும் போது சாட்சியமளித்த பதில் நீதிபதி தெரிவித்தார்.

இவ்வழக்கில் காங்கேசன்துறைப் பகுதியைச் சேர்ந்த ஊரணியில் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் திகதி வி. நடராசா, வி. செல்லையா, எஸ். செல்லத்துரை, எஸ். கணபதிப்பிள்ளை ஆகிய நால்வரும், நாராயணபிள்ளை வயிரமுத்துவை கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நான்கு எதிரிகள் சார்பிலும் வழக்கறிஞர் திரு கே. வி. எஸ். சண்முகநாதன், திரு. ரி. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். முடிக்குரிய தரப்பில் திரு. ஏ. ஏ. டி. சில்வா வழக்கை நடத்தினர்.

எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதனும் முடிக்குரிய தரப்பு வழக்கறிஞர் திரு. ஏ. ஏ. டி. சில்வாவும் தங்கள் தொகுப்புரையை முடித்துக் கொண்டார்கள்.

மேல்விசாரணை இன்று காலை 9-15 மணிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

---

## “அரசியலில் தலையிடுவது எங்கள் கொள்கையல்ல”

### மகாநாயகதேரோ அறிவிப்பு

அநுராதபுரம், புதன்

“பௌத்த சங்கம் எந்த அரசாங்கத்துக்கும் விசுவாசமாய் இருக்கும். அரசியலில் அது தலையிடாது. அரசாங்கத்துக்கு ஆலோசனை சொல்லப் போகாது. ஆனல் பௌத்த மதத்திற்கு மாருக அது செயலாற்றுமானல் அரசாங்கத்துக்கு ஆலோசனை சொல்வது பௌத்த சங்கத்தின் கடமையாகும்” என மல்வத்தை மகாநாயகதேரோ வண. அமுனுகம ராஜகுருஸ்ரீவிபாஸி, பெருந்தொகையான பிக்குகளின் மத்தியில் பேசும்போது கூறினர்.

தாம் மகாநாயகராவாகத்தெரிவு செய்யப்பட்டது மூன்று நிக்காயாக்களிலும் பாராட்டப்பட்டதென்றும், பௌத்தர்கள் மட்டுமின்றி கத்தோலிக்கர்கள், ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகிய அனைவரும் அதை வரவேற்றனர் என்றும் அவர் கூறினர்.

### சுப்பிரமணியர் விக்கிரகம் பிரதிட்டை

உரும்பராய், புதன்

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் அமைந்திருக்கும் கோயிலில் வேதபுராண சூட்சுமதரிசனி சிவஸ்ரீ கு. பொன்னையாக் குருக்களால் சைவாகம விதிப்படி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் விக்கிரகம் சமீபத்தில் பிரதிட்டை செய்து வைக்கப்பட்டது. பாடசாலை ஆசிரியர்களும், பெற்றோர்களும், மாணவர்களும் சூழ புதிய பாலசுப்பிரமணியர் விக்கிரகத்தை உரும்பராய் கற்பகப் பிள்ளையார் கோயிலிலிருந்து வீதிவலமாகப் பாடசாலைக்கு சிவநாம ஒலியுடன் மாணவர்கள் எடுத்துச்சென்றனர். ஆரம்பக்கிரியைகளை சிவஸ்ரீ ச. முத்துக்குமாரசாமிக்குருக்கள் நடத்தி வைத்தார்.

---

### மூன்றரை . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூன் என்ற கருத்தும் நிலவி வருகிறது. இமமன்னனை கடிமணம் செய்துகொண்ட சோரி கையாம் ஆடகசுந்தரி என்னும் அரசியைப் பற்றிய வரலாற்றில் இருள் சூழ்ந்து தெளிவின்றி இருக்கின்றது.

வரிப்பத்தின் வளத்திற்காக கந்தளாய் குளத்தை பூதத்தேவரின் உதவியுடன் கட்டுவித்து, குளத்தடியில் “என்னூழி சென்றபின் நான் வருவேன்” என்ற காலக்கற்றூண்களை நிறுத்திச் சென்ற குளக்கோட்டு மகாராசனின் கர்ண பரம்பரைக்கதைகள் இப்பகுதியில் பல தலைமுறைகளாக வழங்கப்பட்டு வந்திருந்தும் இலங்கைச் சரித்திரத்தில் இக்குளம் இரண்டாவது அக்போ மன்னனல் கட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இக்குறிப்புகளை வரலாற்று வல்லுனர்களின் சிந்தனையில் வித்திட விரும்புகின்றேன். பௌத்த விகாரைகளைப் பற்றியும், தாகபங்களைப் பற்றியும் இலங்கைச் சரித்திரத்தில் காணப்படும் விபரங்கள் திருக்கோணேஸ்வரத்தைப் பற்றியோ, குளக்கோட்டு மகாராசனைப் பற்றியோ இல்லை. நம்மவர்கள் இத்திருப்பதியின் தொன்மை மிகு வரலாற்றுச் சிறப்பினை நன்கு ஆராய்ந்து காலவரையறை செய்து, இலங்கைச் சரித்திரத்தின் மறுபதிப்புகளில் இடம் பெறச் செய்தல் கடனாகும்

இப்பெரும் பணியில் ஈடுபடும் வரலாற்று வல்லுனர்க்கு இங்குஓர் ஆய்வுக் கூடம் அமைக்கப்படல் வேண்டும். போத்துக்கேயர் எழுப்பிய கோட்டைக்கு அழகும், அரணும் கொடுக்கும் ஆலயத்தின் சிற்பத் தூண்களும், கல்வெட்டுக்களும், இறங்குதுறையில் நிறைந்து கிடக்கும் சிற்பச் சிதைவுகளும் இவ்வாய்வுக் கூடத்தில் சேர்க்கப்பட வேண்டும். மலையடிவாரத்தில் கடலில் அமிழ்ந்து கிடக்கும் ஆயப்ல புராதனப் பொருட்கள் யாவும் மீட்கப்படவேண்டும்.

இவ்வாலயத்தின் பூர்வீக உண்மைகளை உணர்த்த வல்ல ஏட்டுச்சுவடிகள் தம்பலகாமம், கொட்டியாபுரம், கட்டுக்குளப் பற்றுக்களில் செல்லரித்து சிதைந்து கொண்டிருக்கின்றன. இவையனைத்தும் ஆய்வுக் கூடத்தில் தஞ்சம் புகவேண்டும்.

(நாளை முடியும்)

### மத்தியவங்கி அறிக்கை

கொழும்பு, புதன்

1963-ம் ஆண்டுக்கான மத்திய வங்கியின் அறிக்கை நிதி மந்திரியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அபிவிருத்திக்கான திட்டங்கள் நிறைவேற சரியான திட்டம் வகுக்கப்பட வேண்டும் என அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

---

கொழும்பு, புதன்

கடந்த திங்கட்கிழமை சேமிப்புக் கிடங்கிலிருந்து பெருந்தொகையான சிகரெட்டுகள் காணமற்போனது குறித்து 4 பேர் கைதுசெய்யப்பட்டிருக்கிறர்கள்.

---

## தமிழரசுக் கட்சிப் பிரமுகர் பிரதமரைச் சந்திப்பார்

நல்லூர், வியாழன்

தமிழரசுக்கட்சித் தலைவர். திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை இப்பொழுது தமிழ் அரசாங்க ஊழியர் விஷயமாகச் சந்திக்கமாட்டார் என்றும் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் பிரதமரைச் சந்திக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

தமிழ் பேசும் அரசாங்க ஊழியரைப் பாதிக்கக்கூடிய வகையில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகள் பற்றி பிரதம மந்திரியுடன் திரு. செல்வநாயகம் பேச்சு வார்த்தை நடத்துவாரென வெளிவந்த செய்தியைத் தொடர்ந்து கட்சியின் தலைமைப்பீட நிர்வாகி ஒருவர் அபிப்பிராயம் தெரிவிக்கையில் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் பிரதமரைச் சந்திக்கமாட்டாரென்றும் தமிழரசுக்கட்சிப் பிரமுகர் ஒருவர் பிரதமரைச் சந்திப்பாரென்றும் அந்தப் பேச்சு வார்த்தையைத் தொடர்ந்தே மேல் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சிப் பிரமுகர் பிரதமரை விரைவில் சந்திப்பதற்கான சூழ்நிலை விரைவில் உருவாகுமென எதிர்பார்க்கப்படுவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

---

## “1963-ம் ஆண்டு பட்ஜட் ஒரு அரசியல் பட்ஜட்”

### இலங்கை வர்த்தகசபையின் வருடாந்த அறிக்கை

கொழும்பு, புதன்

“1963-ம் ஆண்டு பட்ஜட் மொத்தத்தில் ஒரு அரசியல் பட்ஜட்டாகவே இருக்கிறது. பண வீக்கம் ஏற்பட்டுவரும் சமயத்தில் எல்லாம் நல்லபடியாய் இருக்கிறது என நிதிமந்திரி சாதிக்கிருர். உணவு மான்யம் பற்றியவிஷயம் அலட்சியம் செய்யப்பட்டிருப்பதும், வெளிநாட்டுச் செலாவணி பற்ருக்குறை சிறிய விஷயமாக மதிக்கப்பட்டிருப்பதும் ஏமாற்றமான ஒரு விஷயமாகும்” என இலங்கை வர்த்தக சபைக் கூட்டத்தில் வெளியிடப்பட்ட 1963-ம் ஆண்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இறக்குமதி, விநியோகம் ஆகியவற்றில் தனியார்துறையில் வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும், கைத்தொழில் துறையில் முன்னேற்றம் கண்டிருப்பதாயும் அறிக்கை கூறுகிறது.

‘ஜவுளி போன்ற விஷயங்களில் தனியார்துறையில் அதிக நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பாரதூரமான இறக்குமதி வெட்டுகாரணமாக ஜவுளியில் பற்ருக்குறை ஏற்பட்டு விலை உயர்ந்துள்ளது” என்றும் அறிக்கை கூறுகிறது.

‘தனியார்துறை நாட்டின்வருமானத்திலும், வெளிநாட்டுச் செலாவணி சேமிப்பிலும் பிரதான பங்குவகிக்கிறது” என வர்த்தக சபைத் தலைவர் திரு. ஜே. டி. மோல்ட் கூறினர்.

### ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

“மெஜாரிட்டிநாயகம்” இதற்கு செவிசாய்க்குமா?

* * *

யாழ்ப்பாணத்திலே ஆனைப்பந்திக்கு அருகே எட்டடிஉயரமுள்ள ஒரு தென்னை மரத்திலே நடராஜப்பெருமான் தோன்றியிருப்பதாயும், மக்கள் ஏராளமாகச் சென்று தரிசிப்பதாயும், பலர் எனக்கு டெலிபோன் செய்தனர். இது உண்மைதானு என்று ஓர் அன்பர் கேட்கின்ருர். ‘தூணிலும் இருப்பேன் துரும்பிலும் இருப்பேன்’ என்று கூறிய பகவான், தென்னை மரத்தின் மீதும் இருப்பின் அதில் வியப்பில்லை. அவர் இல்லாத இடம் எது? ஆனல் ஏற்கனவே அங்குபல உண்டியல்கள் வைக்கப்பட்டு பண வசூல் நடக்கிறதாம். மக்கள் ஏமாறுமல் இருக்க வேண்டும்.

* * *

பச்சை நிறமுடையர் பாலர் சாலப்பழையர் பிழையெலாம் நீக்கியாள்வர், கச்சைக்கதநாகம் பூண்ட தோளர் கலனென்று கையேந்தி யில்லந் தோறும், பிச்சை கொளநுகள்வர் பெரியர் சாலப் பிறங்கு சடைமுடியர் பேணுந் தொண்டர், இச்சை மிக அறிவர் என்று முள்ளார் இடைமருது மேவியிடங் கொண்டாரே.

—திருநாவுக்கரசர்.

### ரயில் நிலைய வேலை நிறுத்தப்பட்டன

நல்லூர், புதன்

மாவிட்டபுரத்தில் புதிதாக அமைக்கப்படவிருந்த புகையிரத நிலையத்தின் வேலைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகதெரிகிறது.

நவீனமான முறையில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாயினும், புகையிரத நிலையம் அமைப்பதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த காணி சம்பந்தமான பிரச்சனையால் புகையிரத நிலைய வேலைகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

புகையிரத நிலையத்திற்கான பிளாட்பார வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன. புகையிரத வேலைகள் எப்போது ஆரம்பிக்குமெனத் தெரியவில்லை.

### காணவில்லை

இந்துக்கல்லூரி மாணவர் இம்மாதம் 6-ம் திகதி நடத்தவிருக்கும் ‘ஆவது பெண்ணாலே’ என்ற நாடக மூன்று ரூபா டிக்கட் புத்தகம் (இல. 212 தொடக்கம் இல. 220 வரை) காணுது போய்விட்டது. கண்டெடுப்பவர்கள் தயவுசெய்து கல்லூரிஅதிபரிடம் ஒப்படைக்கவும். இந்த இலக்க டிக்கட்டுகள் செல்லுபடியாகாதென்பதையும் அறியப்படுத்துகின்ரும். க. நாகரத்தினம், பல்கலைக்கழக புகுமுக வகுப்பு, இந்துக்கல்லூரி. 202

### மரண அறிவித்தல்

#### பூதத்தம்பி கந்தையா

தாவடியைச் சேர்ந்தவரும் வள்ளிப்பிள்ளையின் அருமைக் கணவனும், இராசையாவின் தகப்பனும், நல்லையா, சுந்தரலிங்கம், சொர்ணலிங்கம் ஆகியோரின் பேரனும், நித்தியகலாவின் பூட்டனுமாகிய பூதத்தம்பி கந்தையா ஆசாரி அவர்கள் 1-4-64 ல் அவரது இல்லத்தில் இயற்கையெய்திவிட்டார். அன்னரது பூதவுடல் (2-4-64) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தாவடி மயானத்தில் சைவமுறைப்படி தகனஞ்செய்யப்படும்.

அறிவிப்பவர்—
கந்தையா இராசையா ஆசாரி.
203

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.